வார இதழ்

விலை 16 காசு.

ஆசிரியர் : அரங்கண்ணல்

ஒளி: 1,| திருவள்ளுவர் ஆண்டு. 1992, மார்கழி 14 வெள்ளி 29-12-61 | கதிர்: 4

வெற்றி முகடு தெரிகிறது!

அணி திரளட்டும், பணி பெருகட்டும்!

வீரர்காள், விரைந்து செயலாற்றுவீர்!



பேசிப்பேசி எனக்குத்தான் சலிப்பு ஏற்பட்டிருக்கிறது, உங்களுக்குச் சலிப்பு ஏற்படவில்லை, என்பதை, இங்கு நீங்கள் திரளாகக் குழுமி இருப்பதன் மூலம் அறிகிறேன். இது நமது பாசத்தின் அறிகுறியாகும்.

தேர்தல் களத்தில், இன்னும் நமக்குப் போதிய அனுபவம் ஏற்படவில்லை; போதிய பயிற்சியும் பெறவில்லை என்பதால், கூட்டம், மட்டுமே கழகத்துக்கு, ஓட்டு நமக்குத்தான், என்று, காங்கிரசு, இன்னும் தப்புக்கணக்குப் போடுகிறது. எனவே நாம், ஓட்டுக் கேட்டும் முறையில், இன்னும் பயிற்சி பெறுகிறதன்மையில், வெற்றிக்குப் பாடுபடவேண்டும்.

காங்கிரசுக்காரரிடம் சென்று, இந்தத் தெருவில் எத்தனை ஓட்டு என்று கேட்டால், இந்தத் தெருவில் 116 ஓட்டுக்கள் இருக்கின்றன, என்பார், அடுத்து, அதை வாங்க என்ன செய்வது என்றால், 500 ரூபாய்கொடுத்தால் முடித்து விடுகிறேன் என்பார்.

ஆனால், நமது கழகத் தோழர்களுக்கு, வீட்டின்பின்கட்டில் இருப்பவர்கள் தெரியாது; பின்கட்டில் இருப்பவர்களுக்கு முன்கட்டில் இருப்பவர்கள் தெரியாது; மாடியில் இருப்பவர்களுக்கு யாரையும் தெரியாது; யாருக்கும் மாடியில் இருப்பவரைப் பற்றித் தெரியாது. ஆகவே, நமது தோழர்கள், வட்டம் வட்டமாகக் குழுவமைத்து, ஒவ்வொருவரும், தெருத்தெருவாக, வீடுவீடாகச் சென்ற ஓட்டு சேகரிக்கவேண்டும். ஓட்டு கேட்பதில் சுறுசுறுப்பைக்காட்டவேண்டும். இதில், நம்மைப்போல் சுறுசுறுப்பைக் காட்டி காங்கிரசால் வெற்றிபெற முடியாது.!

ஒரு வைத்தியரிடம் வயிற்று வலிக்கு மருந்து கேட்டுச்சாப்பிட, வயிற்று வலி போய் கண் கெட்டது; கண்ணுக்கு மருந்துகேட்டு, மருந்து சாப்பிட, காது கெட்டது; காதுக்கு மருந்து கேட்டு, மருந்து சாப்பிட கால் கெட்டது என்பது போன்ற நிலையில், இன்றைய தினம், காங்கிரசு ஆகிவிட்டது!!

14 ஆண்டுகளாக ஆளும் காங்கிரசு தொழிலாளிகளுக்குத் திருப்தி ஏற்படும்படிச் செய்யவில்லை!

தமிழாசிரியர்களது குறைகளைத் தீர்க்கவில்லை!

வியாபாரிகளைப் புதிய, புதிய சட்டத்தால் திணறடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

விலைவாசி உயர்வைத் தடுக்கவில்லை! இதனால், நடுத்தர வர்க்கத்தினரைத் தொல்லைக்குள் தள்ளுகிறார்கள்!

இவ்வளவு கொடுமைகளையும் களைந்தெரியத்தான் கழகம் தேர்தலில் போட்டியிடுகிறது.

எனவே, கழகத்தவர்கள், வெற்றிக்கு ஆயராது பாடுபட வேண்டும்.

காஞ்சீபுரத்தில் ஓட்டு கேட்க, சைக்கிள் படை ஒன்று, வந்து, வீடு வீடாக ஓட்டு கேட்டது. அவர்கள், வெயிலில் களைத்துப் போய் வந்தவர்கள்; அவர்களுக்கு, நான் ஒரு சோடாகூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை!

கோட்டையைப் பிடிக்கச் சென்ற படை ,வெற்றிப் புன்னகையுடன் திரும்பிவருவதுபோல், களைக்காமல், சளைக்காமல், காஞ்சீபுரம் வந்திருந்தார்கள், அந்த வீரர்கள். இப்படி வந்தவர்களது தொண்டை—சைக்கிள் ஊர்வலத்தைக் காங்கிரசு ஈடு செய்ய வேண்டுமானால், ரூ. 15 ஆயிரம் செலவு செய்தால்தான் முடியும்.

ஒரு நாளைய சைக்கிள் ஊர்வலம் காங்கிரசுக்கு, ரூபாய் 15 ஆயிரம் நட்டம் என்கின்ற நிலை இதனால் உருவாகும்!

கழகத்தவர்கள் இப்படி வந்து, வீடு வீடாகச்சென்று ஓட்டு கேட்கும்போது, காங்கிரசுக்காரர்களில், போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் அளகேசன் அவர்களும் மாடி வீடுகளிலே, சீமான் சீமாட்டிகளைச் சிரித்த முகத்தோடு

தி.மு.க. வார இதழ்

அழைத்து ஓட்டுக் கேட்பார்கள்; நேரம் ஆனவுடன், அவர்கள் புறப்படும்போது, மணி 11 ஆகிறது. இருந்து சாப்பிட்டுவிட்டுப் போங்கள், என்று கூறி, தலைவாழை இலை பரப்பி, அதில் பத்து வகை பலகாரங்களைப் பரப்பி, சீரகச் சம்பா அரிசிச்சோறும், திருப்பத்தூர் பருப்பும், மணப்பாறை நெய்யும் போட்டு விருந்து கொடுப்பார்கள்.

ஆனால், முன்னேற்றக் கழகத்துக்காக ஓட்டு கேட்க வந்தால், வந்தவர்கள் களைப்பால், கடைகளில் சோடா இருக்கிறதா? என்று கேட்டால், கடைக்காரர் இல்லை என்பார். சரி தண்ணீர் இருக்கிறதா என்பார்கள். பிறகு, தண்ணீர் வாங்கி அருந்துவார்கள். இதைப்பார்க்க எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது!

எப்படி இடுப்புவலி பட்டதாய், தான் பெற்ற குழந்தையைத் தூக்கி மகிழ்வாளோ, அதைப்போல, இன்று, கழகத் தோழர்கள் சிந்துகின்ற கண்ணீர்! சிந்துகின்ற வியர்வை, நாளை, நமது வெற்றிக்கு மகிழ்ச்சியளிக்கும்.

இன்று வெற்றி என்பது, நாம் எட்டிப்பிடிக்கும் தூரத்தில்தான் உள்ளது. ஆனால், அதை எட்டிப்பிடிக்கும்போது தூற்றல் என்ற காற்று, அதைத் தட்டிவிட அடிக்கும். காலைச்சற்று பலமாக, சாய்ந்து விடாதபடி ஊன்றி விட்டால், அந்தக் காற்று நம்மைத் தட்டிவிடாது. தூற்றுகின்ற மாற்றாரை இப்போது கவனிக்க வேண்டாம். மார்ச்சில் அவர்களைச்சந்தித்துக்கொள்ளுவோம், அதுவரை பொறுத்துக்கொள்வோம்.

மாற்றுக்கட்சியினர், நம்மைத் தரக்குறைவாகத் தாக்கினாலும், நாம், பிப்ரவரியில், வீடு வீடாகச் சென்று, காங்கிரசின் 14 ஆண்டு காலச் சாதனையை—வேதனை நிகழ்ச்சிகளைக்கூறி ஓட்டுகளைச் சேகரிக்க முனையவேண்டும். மாற்றாரின் தூற்றுதலுக்கும், ஏச்சுக்கும், பேச்சுக்கும் மறுத்துப்பேச முற்படத் தேவை இல்லை!

காங்கிரசுக்காரர் ஒருவர், என்னைப்பற்றிக் குறிப்பிடுகையில் 'எங்கள் நிதியமைச்சர் சுப்பிரமணியம் சட்ட சபையில் பேசும்போது, அண்ணாதுரை பெஞ்சுக்கடியில் போய் ஒளிந்து கொள்கிறார்' என்று குறிப்பிட்டாராம். அதற்கு, எதிரே உட்கார்ந்திருந்த ஒரு தோழர், கொஞ்சம் உரக்க, சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது அப்படியா எச்சிலைத் துப்புகிறார் என்றாராம்!

பந்து விளையாட மைதானத்துக்கு வந்தவர்கள், பந்தைப் பார்த்து அடிக்க வேண்டுமே தவிர, விளையாட வந்திருப்பவரின் கண், காது, மூக்குகளைக் கவனித்துக்கொண்டிருந்தால், வெற்றி பெற முடியாது!

வெற்றி என்ற பந்து, தேர்தல் என்ற களத்தில் வீசப்பட்டுள்ளது. அதைப்பார்க்கப் பலர் வந்துள்ளார்கள். ஆகவே, மிகவும் ஜாக்கிரதையாக பந்தை அடித்து வெற்றிபெற முயல வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சிகளைப் பார்த்து, குறிப்பாக கழகத்தைபபார்த்து, இவர்கள் சட்டமன்றம்சென்று, கடந்த ஐந்தாண்டுகளில் எதைச் சாதித்தார்கள்? என்று கேட்கிறார்கள்.

இப்படிப்பட்ட கேள்விகளை, காங்கிரசுக்காரர்கள் கேட்பது, இந்த நாட்டு மக்கள், இன்னும், அரசியல் அரிச்சுவடியே தெரியாமல் இருக்கிறார்கள், என்ற எண்ணமாகும்.

ஒலி பெருக்கியின் வேலை ஒலியைப் பெருக்குவது.

விளக்குகள் வேலை ஒளியைக் கொடுப்பது!

ஆனால், ஒலி பெருக்கி ஒளியைத்தராது; விளக்குகள் ஒலியைத்தர முடியாது!

அதைப்போல, ஆளுங்கட்சிதான் சாதனைகளைச் செய்ய வேண்டும்; அதற்கான யோசனைகளையும், திட்டங்களில் உள்ள குறைகளையும்தான் எதிர்க்கட்சிகள் தரமுடியுமே தவிர, சாதனைகளைச் செய்வதென்பது எதிர்க்கட்சிகளால் இயலக்கூடிய தல்ல!

பிள்ளை பெறும் கர்ப்பிணியின் கஷ்டத்தைப் பார்க்கின்ற மருத்துவச்சி, மெல்ல முதுகைத் தடவிக் கொடுத்து, ஆசுவாசப்படுத்தி, பார்த்தாயா குழந்தையை! எவ்வளவு அழகாக இருக்கிறது என்று கூறவேண்டு. அதை விட்டு விட்டு, நீயா பிள்ளை பெற்றாய? நீயா பிள்ளை பெறுவது? என்று கேட்பது, சுத்தப் பைத்தியக்காரத்தனம் ஆகும்!

ஆளுங்கட்சி என்பது காரியங்களைச் செய்யவேண்டும். எதிர்க்கட்சிகள், செய்ய வேண்டியவைகளைச் சொல்லவேண்டும்; செயல்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டவேண்டும்—இதுதான் முறை.

ஏனென்றால், ஆளுங்கட்சிதான் வரி பெறுகிற கட்சி; ஆகவே, அதுதான் காரியங்களைச் செய்யவேண்டிய கட்சியாகும்.

வித்துவான்களுக்கு வேலை பாட்டுப்பாடுவது; அதுபோல் பக்க வாத்தியக்காரர்களுக்கு வேலை, பாட்டுக்குத் தக்கபடி பக்க வாத்தியங்களை வாசிக்கவேண்டியது. ஆனால், வித்துவானும் பாடி, பக்க வாத்தியக்காரர்களும் பாடத் தொடங்கினால், என்ன ஆவது? அதைப்போல, ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியினரைப் பார்த்து நீங்கள் சாதித்தது என்ன என்றால், என்ன அர்த்தம்?

14 கோடி ரூபாய்களை வரியாக வசூலித்துக் கொண்டிருந்த சென்னை, இன்றைய தினம் ஏறக்குறைய 100 கோடி ரூபாய்களை வரியாகப் பெறுகிறது!

இவ்வளவு வரிகளை வசூலிக்கிற ஆளுங்கட்சி இதுவரை போட்ட திட்டங்கள் எத்தனை?

வெட்டிய வாய்க்கால்கள் எத்தனை?

திறந்த பள்ளிகள் எத்தனை?

வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கியதா?

மனைவியிடம் கேட்க வேண்டியதை மாமியாரிடம் கேட்பது போல், மாமியாரிடம் கேட்கவேண்டியதை மனைவியிடம் கேட்பது போல், ஆளுங்கட்சியைப்பார்த்து எதிர்க்கட்சிகள் கேட்கவேண்டிய கேள்விகளை யெல்லாம், ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சிகளைப் பார்த்து, கேட்கிறார்கள். இது அவ்வளவு நல்லதல்ல!

கடந்த 14 ஆண்டுகளாக, ஆளுகின்ற காங்கிரசுக் கட்சியின் அலங்கோலங்களை, ஆளுங்கட்சியால் விளைந்த கேடுபாடுகளை, அடுக்கடுக்காக நாம் குறிப்பிடலாம். இவைகளை யெல்லாம் ஆளுங்கட்சியினர் மறுக்க முடியுமா?

வரி அதிகரித்துள்ளது—மறுப்பார்களா?

விலைவாசி ஏறியுள்ளது—மறுப்பார்களா?

வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளதை—இல்லை என்று கூறுவார்களா?

தனிப்பட்ட முதலாளிகளின் கொட்டம் அதிகரித்துள்ளதை—இல்லை என்பார்களா?

அரசாங்க அலுவலகங்களில் கட்சி ஆதிக்கம் செலுத்துவதை—இல்லை என்பார்களா?

இவைகளை யெல்லாம் இல்லை யென்பார்களா?

இவைகளை யெல்லாம் இல்லை யென்று வாதாடுபவர்கள் வாருங்கள் வாதாடுவோம்!

வெள்ளையன் காலத்தில் படி அரிசி 14 அணா விற்றது, பாரதப் புத்திரர்கள் ஆட்சியில் 6 அணா ஆகி இருந்தால், பாராட்டலாம்! ஆனால், 1 படி அரிசி 14 அணாவாக இருந்தது மாறி, பாரதப் புத்திரர்கள் ஆட்சியில் 1-3-0 அணாவாக ஆகிவிட்டது. ஆகவே, ஊசிப்போன பண்டமாக ஆகிவிட்டது காங்கிரசு, இன்று!

தெருக்கூத்து ஆடும்போது, ஒட்டு மீசை கீழே விழுந்து விட்டால், மீண்டும் அவனைத் தெருக்கூத்தாட அழைப்பார்களா?

கல்யாணி ராகம்பாடச் சொன்னால், காம்போதி ராகத்தைப் பாடும் பாகவதரைக் கச்சேரிக்கு அழைப்பார்களா?

முதல் மனைவியைக் காயம்பட அடித்து விரட்டியவர்க்கு, இரண்டாந்தாரமாக, முதல் மனைவியின் தங்கையைத்தர சம்மதிப்பார்களா?

விலைவாசி குறைய வேண்டுமென்று கழகம் சொல்லுகிறது; கம்யூனிஸ்டுக் கட்சி கூறுகிறது; சுதந்திராக்கட்சியும் கூறுகிறது; இவர்களோடு சேர்ந்துகொண்டு காங்கிரசும் இதையே சொன்னால், என்ன அர்த்தம்?

வைத்தியரிடம், நோய்க்கு, 40 நாள் மருந்து சாப்பிட்டும் நோய குணமாகவில்லை என்று நோயாளி சொன்னால், நான் 60 நாளாக மருந்து சாப்பிடுகிறேன், இருமல் போகவில்லை என்று கூறும் மருத்துவரைப் பார்த்திருக்கிறீர்களா?

இந்த ஆண்டு, கவர்னர் அறிக்கையில், மழை அதிகம்; விளைச்சல் அதிகம்; ஆனால் விலைவாசி ஏறி இருக்கிறது. என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்கு என்ன அர்த்தம்? இவர்கள் இனி எந்த ஆண்டுதான் விலைவாசி ஏற்றத்தைக் குறைக்கப்போகிறார்கள்? எந்த ஆண்டில்தான் விலை யேற்றத்தைத் தடுக்க முன் வருவார்கள்?

இந்த முறை வருகிற தேர்தலில், நீங்கள், இப்படிப்பட்ட காங்கிரசுக்கு, மீண்டும் வாக்களித்தால், இந்தத் தொல்லைகளில் இருந்து மீள 25 ஆண்டு வரை முடியாது!

இன்னும் 25 ஆண்டுகளுக்கு இந்த நாட்டில் சனநாயகத்துக்கு வேலை இருக்காது! மக்களாட்சியின் மாண்பைக் காண முடியாது!

இவர்கள் ஆட்சியில், இதுவரை விழுந்த பிணங்கள் எத்தனை? என்பதை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாநிலத்துக்கு, 35 கோடி ரூபாய் வரை புதிய வரி விதிக்கப்பட்டுள்ளது!. ஆண்டு ஒன்றுக்கு 7 கோடி வீதம் இன்னும் 5 ஆண்டுகளுக்கு வரி விதிக்கப்பட இருக்கிறது, என்பதை முன் கூட்டியே தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே, வரும் பிப்ரவரியில் இவர்களுக்கு நல்ல தீர்ப்புத் தாருங்கள்.

கொள்கை வழி நின்று, கோணல்வழிச்செல்லாது தொண்டாற்ற தேர்தலில் ஈடுபடுகிறது கழகம்!

விலை வாசியைக் குறைக்கக் கடமை யாற்ற வந்திருக்கிறது கழகம்!

விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க முற்படாதது காங்கிரசு!

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க விரும்பி, முன் வருகிறது கழகம், எனவே கழகத்துக்கு ஆதரவு தாருங்கள்!

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது, காங்கிரசு! அதை அகற்ற முன வாருங்கள்!

நல்லதைச் செய்ய வேண்டுமானால் கழகத்தைத்தேர்ந்தெடுங்கள்!!

—:o—o:—

டெல்லி இழைத்த அநீதி!

வெங்கட்ராமனின் வேதனைக்குரல்!!

ஏத்தன் ஒருவனும் ஏமாளி ஒருவனும் கூட்டுகூடி பயிர்த்தொழிலில் ஈடுபட்டார்களாம்! முதலில் முள்ளங்கி பயிரிட்டார்கள். முள்ளங்கி விளைந்த உடன் எத்தன் ஏமாளியைப் பார்த்துக் கூறினன், "முள்ளங்கி விளைந்து விட்டது. இனிமேல் சாகுபடி செய்யவேண்டும். நாம் இரண்டு பேர் இருக்கிறோம். ஆகவே, விளைவை ஆளுக்குச் சரி பாதியாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். வயலைப் பங்கு போடாமலேயே சரி பாதியாக எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று.

இதைக்கேட்ட ஏமாளி, "ஆமாம் ஆமாம், நமக்குள் நிலத்தைப் பாகப்பிரிவினை செய்யக்கூடாது தான். ஆகையால், அப்படியே ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்ள என்ன செய்யலாம். நீயேஒருவழி சொல்லு" என்றான்.

சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்த எத்தனின் சித்தம் வேலை செய்யத் தொடங்கியது. யோசித்தான், நெடு நேரம். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தபோதும், ஏவரெஸ்டு சிகரத்தை அடைந்த தென்சிங்கும் ஹில்லரியும் அடைந்த மகிழ்ச்சியைப்போலும் மகிழ்ந்தபடி, "கண்டு பிடித்து விட்டேன், நண்பா! ஆமாம். விளைவின்மேல் பாதியை ஒருவரும் கீழ் பாதியை ஒருவரும் எடுத்துக் கொள்வோம். உனக்குத் தேவையான பகுதி எது?" என்று கேட்டானும்.

ஏமாளி பார்த்தானும், எத்தன் சரியாக நம்மிடத்தில் மாட்டிக் கொண்டான். பழி வாங்கிவிட வேண்டியதுதான் என்ற எண்ணத்தோடு. "மண்ணுக்கு மேல் பாகத்தை நான் எடுத்துக்கொள்கிறேன். அடி பாகத்தை நீ எடுத்துக்கொள்" என்றான்.

ஏமாளியின் பரிதாபகரமான முடிவைக்கண்டு முறுவலித்து, "சரி, உன் விருப்பத்தை நான் கெடுக்கவில்லை. மேல் பகுதியை நீயே எடுத்துக்கொள்" என்றானும்.

ஏமாளி மண்ணுக்கு மேலிருந்த பாகத்தை—வெறும் தழைகளை அறுத்து கட்டிக்கொண்டானும். எத்தன் கிழங்கைத்தோண்டி எடுததுக்கொண்டான் என்று ஒரு கதை சொல்லுவார்கள், நாட்டுப் புறங்களில்,

கதையிலே வருகிற எத்தனும் ஏமாளியும் கூட்டு கூடிய கதை போலாகி விட்டது, இந்தியத் துணைக்கண்டத்தில், தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகத்தின் பங்கு!

தென்னகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது—புறக்கணிக்கப்படுகிற என்ற உண்மையை நாம் மட்டுமல்ல; இந்த நாட்டுக்கு வந்து போன வெளி நாட்டு விருந்தாளிகள் கூட ஒப்புக்கொண்டுள்ளனர்.

1955-ம் ஆண்டு இறுதியில் இந்தியாவுக்கு வந்து திரும்பிய ருஷ்யத் தலைவர் புல்கானின், குருசேவ், அவர்கள் ருஷ்யா சென்றவுடன், இந்தியாவுக்குத் தெரிவித்த செய்தி.

"இந்தியாவின் தென்பகுதி (தென்னடு) தொழில் துறையில் பின்தங்கி கிடக்கிறது" என்பது தான்.

ருஷ்யத் தலைவர் மட்டுமல்ல; ஐ.நா.வில் இருந்து இந்தியாவுக்கு வந்துபோன கார்டனர் மர்பியூ என்பவர்கூட, "வடக்குக்கும், தெற்குக்கும் பொருளாதாரத் துறையில் நீண்டதோர் இடைவெளி இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

ருஷ்யத் தலைவர்களும், ஐ.நா.விலிருந்து வந்தவரும் தென்னகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை எடுத்துரைத்தபோதும்; இங்கிருக்கும் ஏக இந்தியத் தத்துப்புத்திரர்களின் சித்தம் தெளியவில்லை! உண்மையை உணரவில்லை!

தென்னகமாவது, புறக்கணிக்கப்படுவதாவது! எல்லாம் சுத்தப் பொய்; பித்தலாட்டம்; குறுகிய மனப்பான்மை படைத்தவர்களின் குறுகிய புத்தி என்று குதர்க்கவாதமிட்டனர்!

எத்தனை காலம் இவர்கள் உண்மையை மறைக்க முடியும்? உள்ளத்தில் இருகிற உணர்வு வெளிப்படாமலாபோகும்? என்று கருதினேம். கருதியது வீண் போகவில்லை.

அண்மையில் சட்ட மன்றம் கடைசி முறையாக கூடிக்கலைந்த நேரத்தில், மேல் சபையில், அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள், தென்னகம் புறக்கணிக்கப்படுகிறதென்பதுசிறு கதையல்ல; தொடர் கதை என்பதை உணர்த்தியிருக்கிறார்.

"மூன்ருவது திட்ட காலத்தில் மாகாணத்துக்கு நூற்புக் கதிர்களை ஒதுக்குவதுபற்றித் தமிழக அரசை இந்திய அரசினர் கலந்து ஆலோசிக்க வில்லை; நமது தேவை மொத்தம் 5 லட்சம் கதிர்கள். ஒதுக்கப்பட்டுள்ளவையோ 5 ஆயிரம் கதிர்கள்தான்"

—இது யாரோ, ஊர் பேர் தெரியாத, ஆளுங் கட்சியைச் சார்ந்தவரோ, சட்ட மன்ற உறுப்பினரோ, ஏனே, தானே நிலையில் இருப்பவரோ குறிப்பிட்டதல்ல அமைச்சர்களிலே ஒருவராக, திரு.சுப்பிரமணியம் அவர்களுக்கு அடுத்தபடி முக்கியமானவர் என்று கருதப்படுகிறவரான திரு. வெங்கட்ராமன் அவர்கள்தான், மேல் மன்றத்தில் நடை பெற்ற விவாதத்தின்போது, வினவொன்றுக்கு, அளித்த விடை!

தென்னகத்துக்கு, குறிப்பாகத தமிழகத்துக்குத் தேவையான கதிர்கள் 5 இலட்சம்!

ஆனல், மத்தியப் பேரரசு, தென்னகத்துக்கு ஒதுக்கியுள்ள கதிர்கள் 75 ஆயிரம்தான்!

என்னதான் ஏக இந்திய வாதமிட்டு, வடக்குக்கு வக்காலத்து வாங்கினுலும், தென்னகம் புறக்கணிக்கப்படவில்லை, என்று எடுத்து முழக்கினுலும், தில்லித் தேவதைகளின் திருப்பார்வை தெற்கை நோக்கித திரும்புவதாகக் காணேம்!

உண்மை கலவாத, ஒரே இந்தியா என்ற எண்ணம் எவ்வளவு தான் உள்ளத்தில் ஊறிப்போய் இருந்தாலும் தென்மாநிலங்கள் சில இருக்கின்றன என்கிற எண்ணம்—

திட்டங்கள் செயல் படுவதற்கு முன்னே—கூடிக் கலந்து விவாதித்து முடிவு எடுப்பதற்குத் தென்னக மாநிலங்களைப்பற்றி இஞ்சித்தும் எண்ணுவதில்லை, தில்லிப் பேரரசு!—என்ற உண்மையைத் தான் தெளிவாக்கி இருக்கிறது அமைச்சரின் பதில்!

எந்த ஒரு மாநிலத்தின் தேவையைப் பற்றிச் சிந்திக்கிருர்களோ, எந்த ஒரு மாநிலற்தின் வாழ்வுக்கும், வளத்துக்கும் வழி காணத் தொடங்குகிருர்களோ, அந்த மாநிலததையும் அழைத்து, அந்த மாநிலத்தின் தேவையையும் அறிந்து, ஆய்ந்து, முடிவு காண வேண்டிய விதி முறைகளை வீதியிலே வீசியெறிந்துவிட்டு, தங்கள் எண்ணத்துக்கேற்ப, தங்கள் மனே நிலைக்கு ஏற்ப, திட்டத்தில் பங்கு தருகிருர்கள், தென்னக மாநிலங்களுக்குத் தில்லி மூலவர்கள்!

வரிகளைத் திரட்டி, வாரி வழங்கி விட்டு, வந்ததைத் தின்று, வாயில் வந்ததை உமிழும் 'உத்தமர்'களைப் போல், கிடைததைப் பெற்றுக்கொண்டு பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள்! பெற்று விட்டோம், திட்டத்தில் "பெரும்" பங்கென்று ஓங்காரக் குரல் எழுப்பி மகிழ்கின்றனர், பரிதாபம், பரிதாபம்!!

ஆரம்பத்தில் கதையில் வந்த எத்தனும் ஏமாளியும்கூட்டுக்கூடி பயிர்த் தொழில் செய்தபோது, எததனுவது, ஏமாளியின் ஏமாளித்தனத்தைப் புரிந்துகொண்டு ஏமாற்றுத் திட்டத்தில் வீழ்த்தினன்.

ஆனல், இந்தியத்துணைக் கண்டத்து எத்தர்களோ ஏமாளி நிலையில் இருக்கு தென்னக மாநிலங்களைக்கண்டு, எத்தனைப்போல் கூடக் கேட்காமல், தங்கள் மனம் போல் பங்கீடு செய்திருக்கிருர்கள்!

இதை உணர மறுக்கிற, தமிழக அரசினர், வடக்கு நம்மைப் புறக்கணிக்கவில்லை என்று கூறியபடி, தேர்தல் திருவுலா வைத் தொடங்கி இருக்கிருர்கள்.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறுவதுபோல், எததனை முறைகள் தில்லியில் இருந்து தோல்வியுடன் திரும்பினுலும், வெற்றி, வெற்றி என்று வீராவேசத்துடன் பேசி வருகிருர்கள்!

தென்னகம் அலட்சியப் படுத்தப்படுகிறது; புறக்கணிக்கப்படுகிறது என்ற உண்மை நூற்புக் கதிர் ஒன்றில் மட்டுமல்ல; அணைக்கட்டு வகைகளில்; ஆலை அமைப்பு முறைகளில்; நிதிபங்கீடுகளில்; நீர்ப்பாசனத் திட்டங்களில்; , கிணறு வெட்டுவது போன்றவைகளில்—எல்லாம் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது, என்பதை நாளேடுகளைத் தொடர்ந்து படித்து வருபவர்கள் நன்கு அறிந்து கொண்டிருக்க முடியும்!

இப்படி தென்னகம் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணம்,

அகந்தை

அலட்சியம்

கர்வம்

தான் என்ற எண்ணமும், தில்லித் தேவதைகளின் திருவடி நோக்கி, கோட்டையிலே கொலு விருப்பவர்கள் தங்கள் குமுறலை கூட அல்ல; உரிமையை—தேவையைச் சுட்டிக் காட்டி, தட்டிக்கேட்க மறுப்பதும் ஆகும்!

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற பக்குவம் அறியாமல், 'இந்தா' என்று கொடுக்கும் போது, மறுக்காமல், கொடுப்பதைப் பெற்றுச்சிந்தை குளிரும் உளம் படைத்தோராக இருக்கும் வரை இந்த நாட்டுக்கு உரிய பங்கு எப்படிக் கிடைக்கும்?

வரி தேவை என்பதைச்சுட்டிக் காட்டி, அதைப் பெறுவதற்கு, தில்லி எவ்வளவு உரிமையைக் கடை பிடிக்கிறதோ, எந்த அளவுக்கு அதிகாரத்தோடு கேட்கிறதோ, அந்த அளவுக்கு அக்கரையோடும், உரிமையோடும், அதிகாரத்தோடும், தமக்குத் தேவையான பங்கை தமிழக அரசு ஏன் கேட்கக்கூடாது?

மாநில அரசுகளுக்கு வரி விதிப்புக்கு உத்தரவு போடுகிற மத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்
ஒளி - 1 வெள்ளி 29-12-61 கதிர்- 44

அக்கிரமம் கேட்டீரா

“ஆலைகள் இல்லை யென்று சொல்கிறது தி. மு. கழகம்? பாரீர்! அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில்!!”, என்று ஆர்ப்பரிக்கின்றனர், ஆளவந்தவர்கள். “அய்யாசாமி! உங்கள் மேலிடம் கொடுப்பதோ, பிச்சைக்காசு! அதற்குள் எத்தனை ஆலைகள் ஏற்படுத்தப்போகிறீர்கள்?”, என்று கேட்டால், புருவத்தை நெறித்து, “ஒழிக இந்த அண்ணுதுரை! அழிக இந்தக்கட்சி!!”, என்று அலறுகிருர்கள்.

சுயராஜ்யம் ஏற்பட்டபிறகு, வடக்கு ஆலைத்தொழிலில் வளர்ந்திருக்கிறது! தெற்கு, அந்த அளவு பயன் பெறவில்லை!!—என்பது, நமது, குற்றச்சாட்டுகளில் ஒன்று. வீணுன வாதமல்ல; அவர்கள் தரும் கணக்கே,ஒப்புக்கொள்கிறது. அமைச்சர்களும் இதை மறுக்கவில்லை. “ஆமாம்! ஆனுலும், பாருங்கள். ஏற்படாமலா போகப்போகிறது? எல்லாம் உண்டாகும்!!”, என்று இன்று நேற்றல்ல, 14 ஆண்டுகளாகவே, கிளிப்பிள்ளைகளைப்போல், சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். இப்போது, அப்படிச் சொல்வதற்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது! ஏற்படும்-அடுத்த 5ஆண்டுத்திட்டம் செய்யும்-எல்லாம் எங்கள் டில்லி பார்த்துச்செய்யும்-என்று காமராசர்கள் இனிமேல் சொல்ல முடியாது! ஆமாம், அன்பர் பண்டித நேருவைத் தலைவராகக்கொண்டகுழு, இந்த மண்ணின் தலை விதியை நிர்ணயிக்கும்குழு, திட்ட மேதைகள் நிறைந்தகுழு, திறமைசாலிகளின் இருப்பிடமானகுழு, ஐந்தாண்டுத்திட்டங்களைத் தயாரிக்கும் குழு, டில்லியிலே யிருக்கும் திட்டக்குழு, டிசம்பர் 26ந்தேதி, செப்புகிறது—விருப்பம்போல் ஆலைகளை அமைக்கமுடியாது, இனிமேல் என்று!! “எச்சரிக்கையாயிருக்கவேண்டும்! அந்த ஆலை, இந்தத் தொழில் திட்டம் என்று போடாதீர்கள்”,என்று சர்க்காருக்குயோசனை வழங்கியிருக்கிறது!!

அந்நியச் செலாவணி இல்லையாம்—போக்குவரத்து வசதி கிடையாதாம்—மின்சாரசக்தித் தேவையான அளவு அகப்படாதாம்—அதனுல், தொழில்களை ஆரம்பிக்க முடியாதாம்.

அமெரிக்கா கேட்ட கடன்களைத்தருகிறது—ஆனுலும் அந்நியச் செலாவணி இல்லை! பேப்பருக்கும் முக்கிய பொருள்களுக்கும் ‘கண்டிரோல் வைத்து’ இருக்கிருர்கள்—இருந்தாலும் அந்நியச் செலாவணி இல்லை!! சித்தரஞ்சனில் செய்கிறோம், சென்னை பெரம்பூரைப் பாரீர், பங்களூரில்கூடக் கட்டுகிறோம என்கிருர்கள்—என்ருலும், இல்லையாம் போக்குவரத்து வசதி!! வடக்கைவிட, போக்குவரத்துத் துறையில், தெற்கு எவ்வளவோ பின் தங்கியிருக்கிறது என்று நாம் சொல்லி வருகிறோம். அதுவே, காரணமாகக்காட்டப்படுகிறது, புதிய ஆலைகளை அமைக்க அந்த வசதி இல்லாததால், கிடையாதாம் புதிய ஆலைகள்!! முன்பொருதடவை மின்சார மந்திரி ராமையா பெருமைபட்டுக் கொண்டார், நமது மாநிலம் மின்சார உற்பத்தியில் முதல் வரிசையில் நிற்பதாக. நின்றென்ன பயன்! சக்தி மட்டும் இருந்து? டில்லியின் அனுக்ரகமும் நிதி உதவியும் ‘சைபர் என்கிருர்களே!!

திட்டக்குழு இந்த ‘யோசனையை நல்கியதும், மத்திய தொழில் வர்த்தகக் குழுவினர், “அப்படியே நடக்கிறோம்” என்று தலையாட்டியிருக்கின்றனர். என்னென்ன தொழில்களைத் தொடங்க, எங்கெந்த இடத்தில் அனுமதி வழங்கலாம் என்பதை வகையறுப்பது இந்தத் தொழில் வர்த்தகக்குழு. அதுவும், “ஆமாம்” போட்டிருக்கிறது என்ருல், எப்படி புதிய ஆலைகள் ஏற்பட முடியும். வழி எங்கே அமையும். வடிகட்டின அறிவாளிகள்போல், தெற்கும் வளரப்போகிறது என்று தெந்தினபாடும் திருவாளர்கள், இதற்கென்ன பரிகாரம் தேடப் போகிருர்கள்! தேர்தலுக்கு ஓட்டுக்கேட்கும்போது என்ன பதில் தரப் போகிருர்கள்!!

*

அய்யகோ இந்தி!

“வருகின்ற தடவையும் மாட்டுக்கு ஓட்டுப்போட்டால் நிச்சயம் இந்தி, நம் குரல் வளைகளைப்பிடித்து ஆட்டும்” என்பதற்கான, அறிகுறிகள், இப்போதே தெரிய ஆரம்பித்திருக்கின்றன.

மேல் உத்தியோகத்துக்கு இந்தி வேண்டும்—மத்திய சர்க்காரில் வேலைக்குப்போக இந்தி வேண்டும் என்பதோடின்றி, எல்லாத் துறைகளிலும் இந்தி நுழைய இருக்கிறது! படித்தோரே! பண்புள்ளோரே! நிச்சயம், டில்லிக்குத் தலையாட்டும் தம்பிரான்கள் அடுத்த தடவையும் ஆட்சியிலிருந்தால், இந்தி தன் வாலை நுழைக்கும் இதில் எள்ளளவும் ஐயம் வேண்டாம்.

“கல்லூரிகளில் ஆங்கிலம் சீக்கப்பட்டால் அந்த இடத்தில் இந்தியே இருக்கவேண்டும்.”, என்று இந்த கிழமைகூட மத்திய அரசின் கல்வியிலாகா, கருதுகிறதாம். கெமிஸ்டிரி, பிசிக்ஸ், சூலாஜி, பிசியாலஜி, பாடனி போன்ற பாடங்கள், இங்கிலீசுக்குப்பதில் இந்தியிலிருக்கவேண்டுமாம்! கருதுகிறதாம், டில்லி கல்வி இலாகா!!

அப்படியொரு நிலைவந்தால், என்னுகும் நம் கதி? இதைத்தடுக்க நமக்கு என்ன சக்தி இருக்கிறது? வலியுறுத்தித் நிணித்தால் காங்கிரசுக்காரர்களால் மறுக்கவா முடியும்? பிள்ளைகளைப் பெற்றோரே! பெரிய வேலைகளுக்குப்போக ஆசைப்படுவோரே! விஞ்ஞானம் தழைக்க வேண்டுமென விரும்புவோரே!தரமான அறிவு எம்தெகிலுண்டு என்போரே!இந்தக்கொடுமைக்கு என்ன பதில்தரப்போகின்றீர்? எத்தனை தடவைகள் எதிர்த்தாலும், விடமாட்டேன் என்கிறது டில்லி!, இந்தி விஷயத்தில், சந்து பொந்துகளை யெல்லாம் கண்டுபிடிக்கிறது நுழைக்க! அந்த டில்லியைத் தட்டித்தடுக்க வேண்டாமா? நம் சந்ததியினர், இந்த ஆபத்திலிருந்து மீளவேண்டாமா? மறுபடியும் மாட்டுக்கே ஓட்டென்ருல், மமதையாளர்கள், நெஞ்சுரம்கொள்ளாரா? நினைத்துப்பார்ப்பீர்! நீக்குவீர், இந்திக்குத் தாளம்போடுகிறவர்களை! இது சமயம் தவறிடின், பிறகு இத்தவற்றைப்போக்க, நாம் எத்தனை ஆண்டுகள் பாடுபடவேண்டும் என்பதை எண்ணிடுவீர்; எண்ணும்போதே, துடிககிறதன்றோ இதயம்? அத்துடிப்பின் பதில்என்ன ஓட்டு, மாட்டுக்கா! அதை எதிர்க்கும் கட்சிக்கா!!

*

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யய் பேரரசு, திட்டங்களில் கலந்து கொண்டு, தேவையான கருத்துக்களை வழங்கவும், தேவையான திட்டங்களைப் பெறவும் ஏன் மாநில அரசுகளை அழைக்கக்கூடாது? ஏன் கலந்து, பேசி, நல்லதோர் முடிவுக்கு வரக்கூடாது?

வரியைக் கொடுக்கவும், கூறுவதைக் கேட்கவுந்தான் தென்னக மாநிலங்களுக்கு உரிமை உண்டு; நாம் கொடுப்பதைப் பெறத்தான் அவர்களுக்குத் தகுதி உண்டு; தட்டிக் கேட்க உரிமை இல்லை, என்ற எண்ணம் தானே, மாநில அரசைக் கலந்து கொள்ளாமல், மத்திய அரசு முடிவெடுப்பதின் நோக்கம்?

இதை, ஏன், இன்னும் மாநில அரசு உணர்ந்துகொள்ளவில்லை? ஏன் தென்னகத் தேவையைத் தட்டிக்கேட்டுப் பெற முனையவில்லை? அதட்டிக் கேட்டால், பதவி பறிபோகும் என்ற அச்சம,? அல்லது உள்ளத்தில் உரமில்லையா?

வரி கொடுத்து, வறுமைத் தேள் கொட்ட, மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் நம் வாழ்வுக்கு வளங்காணவகைகாண நினையாதவர்களுக்கு-வஞ்சக நெஞ்சங்கொண்ட வடக்கின் கொடுமையை உணர்ந்தும் திருந்தாதவர்களுக்கு—வர விருக்கும் தேர்தலிலே தீர்ப்புக்காண வேண்டாமா? கொடுமைக்கோர் முடிவு கட்ட வேண்டாமா?

—எ. கலைமுகிலன்

அறிவிப்பு

அறப்போர் ‘பொங்கல் மலர்’ வேலைகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இவ்வார இதழ் 8 பக்கங்களோடு வெளிவருகிறது. வரும் 5—1—62 இதழ் நிறுத்தப்பட்டிருக்கிறது. 19—1—62 முதல் வழக்கம்போல் 12 பக்கங்களுடன் வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

—நி-கி.

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 85 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னே. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ, 4. வி. பி. பி. செலவு 85. ந. பை

குடும்ப இலகு வைத்தியம்

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள்தெரு

(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1

நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

பண்பின் பெட்டகமான அண்ணாவின் பெருந்தன்மையை எழுத எழுத எண்ண மெல்லாம் இனிக்கிறது! பழகிய எங்களிடமட்டு மல்ல, கழகச் சகோதரர்கள் அனைவரையும் அணைத்துக் கொண்டு போவதில் அவர் காட்டிய பொறுமை சாதாரணமானதல்ல. இப்போது, என்னவோ, இந்தியத் துணைக்கண்டத்திலேயே பெரிய ராஜதந்திரிபோலத் தோழர் சம்பத், தன்னைக் கருதிக் கொண்டு பேசுகிறார்! அவரைக் கழகத்தில் ஏற்பட்ட கண்டனங்களிலிருந்தெல்லாம், எத்தனைத் தடவைகள் அண்ணா காப்பாற்றியிருக்கிறார் தெரியுமா? கழகம் ஆரம்பித்து ஈராண்டுகளுக்கெல்லாம் காஞ்சிபுரம் திராவிட நாடு அலுவலகத்தில், கழகப்பொதுக்குழுக்கூட்டம் ஏற்பாடாகியிருந்தது பொதுக்குழுகூடுவதற்குச் சில நாட்களுக்குமுன்பு தோழர் சம்பத், எல்லோருக்கும் ஓர் 'அறிக்கை' அனுப்பினார், அச்சடித்து. இந்தக் குணம், கழகத்தை விட்டுப்போவதற்கு முன்பு அல்ல, அப்போதே ஏற்பட்டுவிட்டது! அந்த அறிக்கையில் தோழர் நெடுஞ்செழியன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றையும் கொண்டு வந்திருந்தார், சம்பத். பல முனைத்தாக்குதல்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு கழகம் அரும்பி வரும் மலர்போல் ஆகிக்கொண்டிருந்த சமயம். பொறுப்புள்ள எவனும், தன்னுடைய கருத்துக்களை நேரிடையாகச் சந்தித்துச் சொல்லி, எப்படியாவது கழகம் இதருமல் வளரப் பாடுபடவேண்டும் என்றுதான் எண்ணுவான். ஆனால், சம்பத்துக்கு ஆரம்பத்திலிருந்தே கழகத்தைத் தன்னுடைய நலன்களையும் விருப்பு வெறுப்புகளையும் பாதுகாக்கும் ஒரு கூட்டுத்திருப்பணிச் சபையாக வைத்திருக்கும் ஆசை!! அப்போது, நெடுஞ்செழியன், கழகப்பிரச்சாரக் குழுச்செயலாளராக இருந்தார். பிரச்சாரப் பகுதியைத்திட்டமிட்டு அவர் செய்யவில்லை யென்று குற்றம் சொல்லி, அத்தீர்மானத்தை அனுப்பியிருந்தார். தீர்மானத்தைக் கண்ட நாங்கள், இதென்ன சிறுபிள்ளைத்தனமாயிருக்கிறதே என்று பேசிக்கொண்டோம்! பொதுக்குழுவுக்கு வந்த எல்லா உறுப்பினர்களும் "செச்சே! வெண்ணெய் திரளும்போது தாழியை உடைக்கும் தன்மையிலிருக்கிறதே சம்பத்தின் போக்கு!" என்று கோபத்தோடும் எரிச்சலோடும் இருந்தனர். என்ன ஆகுமோ இந்தப் பொதுக்குழுக் கூட்டம் என்று பொதுக்குழுக் கூட ஏற்பாடுசெய்த எங்களுக்கு அச்சமாயிருந்தது! சம்பத், ஒரு பெரிய பையை எடுத்துக் கொண்டு, நேரே இரயிலடியிலிருந்து வந்தார். கூட்டம் ஆரம்பமாகி ஒவ்வொரு விஷயங்களாகப் பரிசீலனை செய்து கொண்டிருந்தது. சம்பத்தால், இவ்வளவு அமைதியாகத் தன் தீர்மானம் பற்றிக் கவலைப்படாமல் நடப்பது காண சகிக்க முடியவில்லை? பெரிய மனுஷனைத்தான் கொடுத்தத் தீர்மானத்தைப் பற்றிச் சிறு பேச்சுக்கூட எழும்பவில்லை யென்பதைச் சகிக்க முடியவில்லை ஈரோட்டு இளவலால்!! "என்ன ஆயிற்று என் தீர்மானம்?", என்று கோபாவேசமாகக் கத்தினார். சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து அறிவியக்கம் வளரப்பாடுபட்ட நல்லவர்களில் ஒருவரும், இறந்து போனவரும், கலைஞர் கருணாநிதி போன்றோர் கழகத்தில் பற்றுதல் கொள்ளக் காரணமானவருமான திருவாரூர் டி. என். இராமன் அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அரும்புபோல் வேரிட்டு வரும் இயக்கம் ஆல்போல் தழைக்கவேண்டும் என்று விரும்பும் எவருக்கும் இதைப்போன்ற தகராறுகளை உண்டாக்குவோர் மீது ஆத்திரம் வராமலா இருக்கும்? "மகாத் தீர்மானம்! உட்காரப்பா...உங்கப்பாருக்குத்தான் யாரைக்கண்டாலும் தன்னைவிட நல்லாயிருக்கானேன்னு, எரிச்சவரும். அந்தப் புத்தி உன்னை விட்டுப் போகலியா? என்னமோ, குருவி கட்டின கூடாட்டம் இருக்கோம்! இதையும் கலைச்சிடணும்கிறதுக்காகவா, நீ இங்கேயிருக்கே?" என்று, ஓவென்று அலறி விட்டார்!! அதைக்கேட்ட சம்பத்தின் முகமும் கண்ணும் சிவந்தது. என்ன பேச முடியும்? பேச்சு வரவில்லை! கோபம் கொப்பளித்தது!! பச்சையப்பன் கல்லூரியில்படிக்கும்போது சம்பத்தைக் கண்டாலே, ஆசிரியர்களும் மாணவர்களும் பயப்படுவார்களாம். அவ்வளவு முன் கோபி! கோபம் வந்து விட்டால், கண் மண்ணென்று பார்க்கமாட்டாராம். "அப்பப்பா! அவன் ரௌடித்தனத்தை யாராலே தாங்க முடியும்?" என்று அவருடைய வீட்டாரே, செல்லமாகச் சொல்லிக் கொள்கிற அளவுக்கு, துடிப்புள்ளவர். அதனால், எழுந்ததுமே, டி. என். இராமனை அடிக்கப்போவது போல், கைகளை நீட்டி மடக்கிக் கொண்டு பாய்ந்தார். ஆம், ஆச்சரியப்படாதீர்கள், பொதுக்குழுவில்தான் 'பொறுபபுள்ள நபரான' சம்பத், இப்படி நடந்தார்!! டி. என். இராமனும் விடவில்லை, "வாடா! சின்னப்பயலே! உனக்கு அவ்வளவு திமிரா?" என்று அவரும் கூவிக்கொண்டு தயாரானார். குடந்தை கே. கே நீலமேகம் அவர்கள் தலையிட்டு, இராமனைச் சாந்தப்படுத்தினர். அண்ணா அதட்டி, சம்பத்தை உட்காரச் சொன்னார். அது மட்டுமின்றி, சம்பத்தின் மனம் புண்பட்டு விடக்கூடாதே யென்று, அவருக்காகப் பரிந்து பேசி, ஆத்திர மடைந்திருந்த பொதுக்குழு உறுப்பினர்களை யெல்லாம் சாந்தப்படுத்தினார்!! இந்தச் சம்பவம் கூட இராமனுக்கும் சம்பத்துக்கும் நடந்தது. ஆனால், தோழர் சம்பத்து, அண்ணாவையே தாக்கிப் பேசினார், அதற்குப் பின் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு சிதம்பரத்தில் நடந்த பொதுக்குழுவில். கோவை மாவட்டச் செயலாளராக அப்போது சம்பத்து இருந்தார். அங்கே சுற்றுப்பயணம் வர அண்ணா தேதி தரவில்லை யென்பதைப் பெரிய சாக்காக வைத்து, "அறிஞர் என்று சொல்கிற என் வாயால், 'திருவாளர்' என்று அழைக்கவேண்டி வந்துவிடும் என்பதை இப்பொதுக்குழுவின் மூலம் எச்சரிக்கிறேன்..." என்று என்னென்னமோ, பேசினார். பொதுக்குழு உறுப்பினர்களோ, குமுறினர்! "ஒரு கூட்டத்துக்குத் தேதி தரவில்லை யென்பதற்காக இவ்வளவு தூரம் அண்ணாவை—அவ ருடன் பழகிக் கொண்டே—தி ட்டிப் பேசும் இவன் யார்?", என்று பலர் கொந்தளித்துக் கிளம்பினர்!!

ஆனால், அவர்களை யெல்லாம் சமாதானப்படுத்திவிட்டு, புன்சிரிப்போடு அண்ணா சொன்னார், "குழந்தை உதைக்கிறதே என்பதற்காக அதன் காலை வெட்டி விடச் சொன்னால், அவன் உண்மையான தந்தையாக மாட்டான். கூட்டத்துக்குத்தானே வரவேண்டும்! இதைச் சம்பத் என்னிடம் நேரில் கேட்டிருக்கலாம்; அவன் கூப்பிட்டா நான் போகாமலிருப்பேன்? ஏனோ, இவ்வளவு பெரிய விஷயமாக இங்கே பேசி விட்டான். அவனுக்கு என்னைப் பேச உரிமையுண்டு. கேட்டுக் கொள்ளவேண்டிய நிலை என்னுடையது. கழகத்திலேயே என் மூலம்காரியத்தை அதிகம் சாதித்துக் கொள்கிறவன், சம்பத். ஏம்பா? உனக்கு எத்தனைக் கூட்டத்துக்கு நான் வரணும் சொல்லு!!", என்றார் அண்ணா.

உண்மையில், எனக்கெல்லாம் அழுகையே வந்துவிட்டது! "ஏன் அண்ணா இவ்வளவு தூரம் பணிவாகப் பேசுகிறார்—ஒரு கூட்டத்துக்குத் தேதி தராதது பெரிய விஷயமா—அதற்காகக் கட்சியை விட்டேப்போய் விடுகிறவன், எத்தனை நாளைக்குக்கட்சியிலே யிருப்பான்?" என்று பேசிக்கொண்டோம். இவ்வளவு யோக்கியமாக அண்ணாவைக் கேள்வி கேட்கிறாரே, அனுப்பிய பணத்தை வாங்கிக்கொண்டு எத்தனைக் கூட்டங்களுக்கு இந்த சம்பத் வரவில்லை தெரியுமா!—என்று ஒரு மாவட்டச் செயலாளர், எங்களைக் கேட்டார். கூட்டமா சம்பத்துக்கு முக்கியம்? ஈரோட்டில் ஏதாவது நடந்திருக்கும்! அதன் 'எதிரொலி'யை நாம் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கும்!! இப்படித் தன்மீது குற்றம் சுமத்திய சமயத்திடம் அன்போடு நடந்து கொண்டாரல்லவா, அண்ணா? இதைவிட மேலானக் குற்றச் சாட்டை, மதுரையில் நடந்த ஒரு பொதுக்குழுவின்போது சென்னையைச் சார்ந்த தோழர் எ.கே.சாமி என்பவர் சம்பத்தின் மீது சுமத்தினார். கூட்டம் ஒன்றுக்கு 50. ரூபாய் 'ரேட்' போட்டு சம்பத் கேட்பதாகவும், ஏழைகள் நடத்தும் இயக்கத்தைச் சேர்ந்த எங்களால் எப்படி முடியுமென்றும், இதற்கு ஒரு வரையறைச்செய்யப்பட வேண்டுமென்றும், அவர் சொன்னார்!

இதைக்கேட்டதும் சம்பத், "அப்பத்தான் நான் வருவேன்! இஷ்டமிருந்தாக்கூப்பிடு இல்லாட்டாப்போ" என்று தந்தையார் பாணியிலேயே பதில் சொல்ல ஆரம்பித்தார், அரசியல் மேதை. ஆத்திர மடைந்தபொதுக்குழு உறுப்பினர்களைச் சமாதானப்படுத்தி, சம்பத்தைக் காப்பாற்றினார், அண்ணா!! தன்னைக்காய்ந்த தவறையும், மன்னிப்போம் மறப்போம், என்று அண்ணா நடந்து கொண்டநிகழ்ச்சிகள் பல உண்டு. கவிஞர் கண்ணதாசனை ஒரு தடவை நானும் கலைஞர் கருணாநிதியும் கழகத்தை விட்டு ஒதுங்கி விடச் சொன்னோம்! அவர் செய்த ஒரு காரியத்தால், கழகத்துக்குக் கெட்டபெயர் வருமென்று கருதியதால், சொன்னோம்!!

(வளரும்)

. . உங்களது தேவைக்கு

V.G.பன்னீர்தாஸ் & கோ.

சைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
போன்: 88084 சென்னை-15
பிராஞ்சு:
மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
27, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17



சுலபமானது
தவணைகளில் வாங்குவது

[சென்னை வாசிகளுக்கு மட்டும்]
மர்பி, நேஷனல்-எக்கோ, ஜி. இ. ஸி. ரேடியோக்கள் மற்றும்
சைக்கிள், கைக்கடிகாரம், வால் கிளாக், மின்சார விசிறி, தையல் மிஷின் முதலியன
• எளிதில் வாங்க விசேஷ சலுகைகள்
• விரும்பும் மாடல்களில் உத்திரவாதத்துடன் கிடைக்கும்

murphy radio
Delights the home!



(சென்ற இதழ் தொடர்ச்சி)

வெறுப்பிலே தோன்றி, இறுதியில் நெருப்புக்கு உணவாகிக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கட்சியின பிணத்தை நோக்கி ஓடி வந்த அந்த உருவம் யாருடையது? பேய்கள் மாநாட்டின் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருந்த ஜனநாயகப் பேய் மெதுவாக பின்னல் சென்றது. "ஐயோ, தேசியமே! என்னை நிர்க்கதியாய் விட்டுவிட்டுச் சென்றுவிட்டாயே!' என்று அந்த உருவம் எழுப்பிய பயங்கரமான ஒலியும் சுடுகாடு முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அதுமட்டுமல்ல; அடுத்த சில நிமிடங்களில் அங்கே ஓர் அவலமான சம்பவம் நடக்க ஆரம்பித்தது எரிந்து கொண்டிருந்த பிணத்தருகே ஓடிய அந்த உருவம் சிதையிலே அடுக்கப்பட்டிருந்த விறகு விராட்டிகளை எடுத்து ஒன்றன்பின் ஒன்றாக எறிய ஆரம்பித்தது.

"ஓகோ, பசி எடுத்த மனிதன் போலும் இவன்! பல நாள் பட்டினியால் துடித்துக் குமுறியவன் போலும்! புல்லைத் தின்னு புண்ணாக்கைத் தின்னு—என்று புத்திமதிகள் சொன்ன மந்திரிகள் வெட்கும்படியாக பிணத்தையே தின்ன வந்துவிட்டான்போலும்!" என்று ஜனநாயகப்பேய் நினைத்த நேரத்தில், பின்னலிருந்து பேய்களின் பேரிரைச்சல் கேட்டது.

பல பேய்கள்: நிறுத்து! நிறுத்து

ஜனநாயகப் பேய்: எனதன் புள்ள நண்பர்களே! நீங்கள் ஏன் எல்லோரும் இப்படி கதறுகிறீர்கள்?

ஒரு பேய்: தலைவர் அவர்களே! பிணத்தைத் தின்னும் உரிமை இந்தச் சுடுகாட்டில் நமக்கு மட்டுமேதான் உண்டு என்பதை மறந்துவிட்டீர்களா? இந்தச் சாகாத மனிதனை யார் அழைத்தார்கள்? அதுவும் இந்தத் தேசியக் கடசியின் உடல் ஊரார் பணத்திலேயே வளர்ந்தது என்று சொல்கிறார்கள்; இந்த சுவையான உடலைப் புசிக்க நமக்கு ஆசை இருக்காதா? ஆனந்தம் இருக்காதா?

ஜனநாயகப் பேய்: அமைதியாக இருங்கள்! நான் இதற்கொரு வழி காணுகிறேன், இப்போது!

அப்போது அந்த மனித உருவம், எரிந்துகொண்டிருந்த பிணத்தின் உருவத்தைக் கண்டுவிட்ட காரணத்தாலோ என்னவோ, மீண்டும் ஒருமுறை பயங்கரமாக அலறி, அந்தப் பிணத்தின் முகத்தில் ஓங்கி ஓங்கி அறைந்தது. அப்போது ஜனநாயகப் பேய் அந்த உருவத்தின் கைகளைப் பிடித்து நிறுத்தியது.

உருவம்: யார் இது? என்னை யார் நீ தடுக்க?

தலைவர்: நன்றாக இருக்கிறது இந்தக் கேள்வி; இது எங்கள் தனி நாடு; இங்கே வந்து புகுந்து எங்கள் அமைதியைக் கெடுத்த நீ எங்களையே கேள்வி கேட்பது மிக வேடிக்கையாகவும் இருக்கிறது?

உருவம்: அதிருக்கட்டும் நீ யார்?

தலைவர்: நான் யாரென்று சொன்னல் நீ அதி்ச்சி அடைவாய்! அலறித் துடிப்பாய்! அப்பால் ஓடிப்போ என்று விரட்டுவாய்! உன் உயிரைக் காபபாற்றிக் கொள்ள தலை தெறிக்க ஓடுவாய்! சொல்லட்டுமா, நான் தான் பேய்!

உருவம்: (சிரித்து) பூ! இவ்வளவு தானு? உன்னைவிட ஒருபடி மேலான நான், உனக்காப் பயப்படுவேன்?

தலைவர்: சீக்கிரம் சொல்; அப்படியானல் நீ யார்?

உருவம்: நான்தான் காங்கிரஸ் காரன்! என் பெயர் பஞ்ச நாட்டார்!

தலைவர: மிகப் புதுமையான பெயராக இருக்கிறதே! பஞ்ச பாண்டவர்கள், உங்கள் ஐந்தாண்டுத் திட்டம்—இவைகளை எல்லாம் நினைவுபடுத்த வைத்த பெயரா?

பஞ்ச நாட்டார்: அதுமட்டுமல்ல நாட்டிலே பஞ்சம்! மக்கள் அபிமானத்திற்குப் பஞ்சம்! இதையெல்லாம் நாடாதவன் என்பதற்காக நாடார் என்றும் காட்டவே சேர்த்து ஒட்டிக் கொண்டேன்; ஆகவே அது சாதிப் பெயர் என்று எண்ணிவிட வேண்டாம், தயவுசெய்து!

தலைவர்: போகட்டும், இந்தப் பிணத்திடம் ஏன் அழுகிறாய்?

பஞ்ச: அந்தக் கொடுமையை என்னவென்று சொல்வதய்யா இது என்ன கட்சியா? சத்தியமாக இல்லை, எல்லோருமே கோட்சே கும்பல்!

தலைவர்: என்ன கோட்சே கும்பலா? இவர்கள் யாரைக் கொன்றார்கள் அப்படி?

பஞ்ச: கோட்சே காந்தியைக் கொன்றான்; இந்த கோட்சேக்கள் காங்கிரசையே கொல்கிறார்கள்!

தலைவர்: இவர்களால் தி. மு. கழகத்தில்தான் பிளவு என்று எங்கள் ஒற்றர்களான அரசியல் பேய்கள் சொன்னார்களே!

பஞ்ச: முட்டாள்கள்! அப்படிச் சொல்லித்தான் எங்களை ஏமாற்றிவிட்டார்கள்! சோகா ஓட்டலில்—அந்தரங்க அறையில் சொன்னதை நாங்கள் அப்படியே நம்பித்தான் குழியில் விழுந்துவிட்டோம். கழகத்தை உடைக்க பலமான கோடாலியாக எதிர்ப்பு அணி ஒன்றை உருவாக்கத் திட்டம் தந்தனர் சிலர். அந்தக் கோடாலியை உருவாக்க எங்களுக்கு எவ்வளவு இலட்சங்கள் செலவு தெரியுமா?

தலைவர்: வைரத்தால் கோடாலி செய்தீர்களா?

பஞ்ச: வைர நெஞ்சம் என்று சொல்கிம்ர்களா! அந்த கழகத்தின் இளைஞர்களின் நெஞ்சைப் பிளப்பதென்றால், அதற்கு அணு சக்தியால் கோடாலி செய்தால்கூட முடியாதென்றுதான் 'குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பு' ஒன்றை விலைக்கு வாங்கினேம் பெரும் செலவில்! ஆனல், ஏ! பேய்க்குலத் தலைவனே! அந்தச் செலவெல்லாம் பாழாக—அந்தக் கோடாலிக் காம்பு உலுத்துப்பேய் உயிரை விட்டு—இங்கே வந்து சுகமாக எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தாயா? என் எண்ணமெல்லாம் பாழ்! திட்டமெல்லாம் பாழ்! நான் என்ன செயவேன்? எப்படி ஜெயிப்பேன் தேர்தலில்? ...ஏ தேசியமே! அல்ப ஆயுசே! நொண்டிக் குதிரையே! என்னுடைய இலட்சங்களைத் தின்று தீர்த்த நாற்ற உடலே! நம்பவைத்து கழுத்தறுந்த நடைப் பிணமே! கழகம் கலையவில்லையடா, என் காசு தான் கரைந்தது! ஐயோ, கொடுமையே!...கொடுமையே!

வாய்விட்டு அழ ஆரம்பித்து விட்டார், பஞ்ச நாட்டார்! அமைதியைக் கெடுப்பதாக மாநாட்டுப் பிரதிநிதிகளான மற்றப் பேய்கள் எதிர்ப்புக் கிளப்பவே அவரைச் சமாதானப்படுத்துவதற்கு ஜனநாயகப் பேய் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டது. இறுதியில் அவரை அழைத்துக்கொண்டு மாநாடு நடக்கும் இடத்திற்குச் சென்றது.

பஞ்ச நாட்டார் பிள்ளையைப் பறிகொடுத்தத் தாயைப் போல—காதலியை இழந்த காதலன்போல்—தேசியக் கட்சியை இழந்து சிலைபோல் அமர்ந்திருந்தார்.

பேய்கள் மீண்டும் பேச ஆரம்பித்தன. "வருகின்ற தேர்தலில் நாம் யாரை ஆதரிப்பது என்பதை முடிவு செய்யவேண்டியது நமது முதல் பணி!" என்று குறிப்பிட்டு அமர்ந்தது, ஒரு பேய்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த பஞ்சநாட்டார் 'குபீர்' என்று எழுந்து நின்றார்.

பஞ்ச நாட்டார்: என்ன, தேர்தலில் ஆதரிப்பதா? அப்படியானல், உங்களுக்கும் ஓட்டு உண்டா?

தலைவர்: ஏன் எங்களுக்கு இல்லையென்று முதலில் சொல்லுங்கள். நாங்கள் என்ன முறைப்படி செத்தா போய்விட்டோம்? சித்திராபுத்திரன் கணக்கேட்டில் குறித்திருக்கும் கால எல்லை வருகிற வரை நாங்கள் செத்ததாகப் பொருள் இல்லையே! இப்போது நாங்கள் உங்கள் ஆட்சிக் கொடுமையால் பேயாகிவிட்டோம்! அதாவது செத்தும் சாகாதவர்கள், போலாகிவிட்டோம்! மேலும் யமதர்மன் எங்களைத் தேடி ஆள் அனுப்புகிறவரையில் நாங்கள் மனிதர்கள் என்றுதானே பொருள்? ஆகவே எங்களுக்கு ஓட்டு இல்லை என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமைகிடையாது.

பஞ்ச நட்டார்: ஓட்டர்கள் பட்டியலில் உங்கள் பெயர்கள் இருப்பதாக நினைவில்லையே!

தலைவர்: இருக்கும், ஆனல் நாங்கள் ஓட்டுப் போட்டதில்லை இதுவரையில்! வேறு யாராவது 'கூலி'க்காக அந்த வேலையைச் செய்து விட்டுப்போவார்கள்! இந்த முறை எங்களுக்கும் ஓட்டளிக்கும் உரிமை வேண்டும்

(7-ம் பக்கம்)

இரண்டுக்கு மேற்பட்ட மெய்கள் சேர்ந்த வடிவங்கள் எளிதில் உணரக் கூடியவை.



கன்னடக் கூட்டெழுத்துக்கள்:

கன்னடத்தில் ட, ந, ம, ய, ர, ல, வ, ஷ, ஆகிய 8 மெய்கள் பின்வரும் மெய்களாகத் தனி வடிவம் பெறுகின்றன.



ர, ற, ஆகிய இரண்டும் முன் மெய்களாக வரும் சமயம் முன் மெய் வடிவம் பின்னால் வலப்புறமாக இடப்படுகிறது. பின்வரும் மெய் வடிவமிட்டு இவ் வடிவங்கள் மற்றொரு மாற்றுருவம் அடைகின்றன



எந்த மெய்யும் தலகட்டில்லாமல் பின் வரும் மெய்யாகக் கீழே எழுதப் பெறலாம்.



இரண்டு மூன்று மெய்கள் சேர்ந்து ஒரே கூட்டெழுத்தாக வரலாம்.



—தொடரும்

(6—ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தலைமை தேர்தல் அதிகாரி திருவாளர் சுந்தரத்திற்கு மகஜர் தந்திருக்கிறோம்!

பஞ்ச: அதையெல்லாம் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; நீங்கள் ஏமாந்து போவீர்கள்!

தலைவர்: நாங்கள் என்ன திடீர் தேசியத்தையா நம்பினோம் பட்டை நாமம் சாத்திக்கொள்ள எங்களுக்கு ஓட்டளிக்க உரிமை தராவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? நாங்களே கட்டாயமாக ஓட்டளிப்போம்! ஓட்டுரிமையுள்ள மனிதர்களை அறைந்து வீழ்த்திவிட்டு, அந்த ஓட்டுகளையும் நாங்கள் போடுவோம்! எங்களை யார் என்று நினைத்துக் கொண்டீர்கள்?

பஞ்ச: என்னருமைப் பேய்களே அப்படி நீங்களும் ஓட்டளிக்கிற வாய்ப்பு கிடைத்தால், நான் சொல்கிறபடிச் செய்வீர்களா?

ஒரு பேய்: என்ன செய்யவேண்டும் என்று சொன்னால் இந்தச் சபை பரிசீலிக்கும்!

பஞ்ச: காங்கிரஸ் ஜெயிக்க பயன் படுத்தவேண்டும்!

ஒரு குரல்: கொடுமையிலும்-கோரக் கொடுமை! மடமையிலும் முட்டாள் மடமை! அது மட்டும் நடவாது! நாடாள ஓர் முடவனை அனுப்புவோம், ஆனால் முட்டாளை அனுப்பமாட்டோம்! (இப்படிக் கத்தியவர் ஆசிரியர் பேய்)

பஞ்ச: ஏன்? ஏன் இப்படி மனிதர்களைப் போலவே நீங்களும் அலறுகிறீர்கள்? காங்கிரஸ் என்ன செய்யவில்லை, இந்த நாட்டிற்கு?

ஒரு குரல்: நாட்டைப் பற்றி ஏன் பேசுகிறீர்? இந்தச் சுடுகாட்டைப பற்றிப் பேசுங்கள்! எங்களிடையே ஜனப்பெருக்கத்தை ஏற்படுத்தி-பஞ்சத்தை பட்டினியை ஏற்படுத்தியது உ[illegible]

வேறொரு பேய்: இத்தகைய கொடுமையைச் செய்துவிட்டு எம்மிடம் ஓட்டுக்கேட்க உங்களுக்கு என்ன தைரியம்?

பஞ்ச: நீங்கள் காங்கிரஸ் ஜெயிக்க பயன்படாவிட்டாலும், ஒரு சில இடங்களில் ஒரு சிலரை வீழ்த்த மட்டுமாவது உதவுவீர்களா? தேசீயத்திற்கு நாங்கள் செலவிட்டது போல் உங்களுக்கும் செலவிடத்தயாராக இருக்கிறோம்—

தலைவர்: யாரார் தோற்கவேண்டும்?...சொல்லுங்கள். மந்திரிகள் யாரையாவது முறியடிக்க வேண்டுமா?

பஞ்ச: நல்ல வேளை; ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மந்திரிகளையே கடிக்க வருகிறீர்கள்! நான் சொல்வது, காஞ்சிபுரத்தில் அண்ணாதுரையை, தஞ்சாவூரில் கருணாநிதியை, திருவல்லிக்கேணியில் நெடுஞ்செழியனை...இன்னும்...

ஆசிரியர் பேய்: இவர்களைத் தோற்கடிக்க வேண்டுமா?

பஞ்ச: ஆமாம்; அதை மட்டும் முதலில் சொல்கிறேன்! அந்த மூன்றுக்குமட்டும் எங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி 3 கோடிகள் செலவிடத் தயார்! ...உங்கள் பங்கு எவ்வளவு சொல்லுங்கள்...இப்போதே செக்கை கிழித்து எறிகிறேன்!

உடனே, எல்லாப் பேய்களும் கூடின; இரகசியமாக ஆலோசனைகள் நடத்த ஆரம்பித்தன! அப்போது திடீரென ஒரு சப்தம்!

"பொழுது புலருகிறது! உதய சூரியன் வருகிறான்! நாம் [illegible]

டும்! மறுபடியும் இன்னொரு நாள் கூடுவோம்! சீக்கிரம்! சீக்கிரம்!!"—என்றது ஒரு பேய்!

உடனே தலைவர், பஞ்ச நாட்டாரிடம் வந்தார்! "உயர்திரு நாட்டார் அவர்களே! இன்று எங்கள் மாநாடு கலைகிறது! பேய்கள் நம்ப வேண்டிய அளவுக்கு உங்கள் கட்சியின் நிலைமை ஆனதிற்கு பெரிதும் பரிதாபப்படுகிறோம்! மீண்டும் பொங்கல் கழித்துத்தான் மாநாடு கூடும்! அப்போது வாருங்கள்; நாங்கள் அது பற்றி பரிசீலிக்கிறோம்!" என்று சொன்னார்!

பஞ்ச நாட்டார் புறப்பட்டார்! பேய்கள் எல்லாம் கலைந்தன!

பொங்கல் கழித்து பேய்கள் கூடுகின்றனவா; பஞ்சநாட்டாரின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

—0—

இதோ ஒரு சஞ்சீவி

கால் ஆணிக்கு

(மேல் பூச்சு மருந்து)

காலில் குழி விழுந்தும், சதை வளர்ந்து முற்றியும் நடக்க முடியாமல் வருந்துபவர்களுக்கு நிச்சயநிவாரணி

விலை தபால்செலவுடன் 4-25

வாணி புக் டிபோ,

3, மலையபெருமாள் தெரு.

பதிவு எண்: எம். 7466

அறப்போர் இலங்கையில் செய்தித்தாளாகப் பதிவுசெய்யப்பட்டது.

கேள்வி பதில்

கே: தென் சென்னை பார்லிமெண்டுத் தொகுதிக்குப் போட்டியிடப் போவதாக த. தே. க. சம்பத் அறிவித்திருக்கிருரே, அதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

இரெ. தண்டபாணி,
சைதாப்பேட்டை.

ப: நுங்கம்பாக்கத்தில் உண்ணுவிரதம் ஆரம்பித்தபோது, தனது நெருங்கிய நண்பர்களிடம், 'அறிவகத்தில் போய் உண்ணுவிரதம் இருக்காமல் இங்கே யிருக்கக் காரணம், நாளைக்கு நான் போட்டிப் போடப்போகிற தொகுதி என்பதுதான். சம்பத் எதற்கும் துணிந்தவர் என்கிற கருத்து இந்த உண்ணுவிரதத்தின் மூலம் கட்சி சார்பற்றவர்களிடம் ஏற்படுமல்லவா?'' என்று அவரே விளக்கம் தந்திருக்கிருர். அரசியலில் அமைதியோடு மக்கள் மனதில் இடம் பெறுவது ஒருவகை. ஏதாவது 'அதிர்ச்சி, கலைச் செய்தபடி இடம் பெறுவது இரண்டாவது வகை. தோழர் சம்பத்தின் சித்தப்பாவான் பெரியார் அவர்கள் பெரும்பாலும் இரண்டாவது வகையிலேயே இப்போதெல்லாம் செல்கிருர்! பெரியாருடைய வழியில் செல்வதே 'இலாபம்' என்று எண்ணுகின்ற சம்பத்தும் 'அதிர்வெடிகளே அரசியல் புகழைத் தரும் என்று நம்பி நடந்துவருவதை நாமறிவோம்!! முதலில் ஈரோட்டில் நிற்கப் போவதாகச் சொல்லப்பட்டது. பலஇடங்களுக்குப் போயும் அலைந்திருக்கிருர். ஈரோடு வட்டாரத்துக்கு இந்தப் பிள்ளை, யார் என்று தெரியாதா! அதனுல் ஈரோட்டுத் தொகுதியில் நின்ருலும் முடியாது என்கிற நிலை சம்பத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. வேறு இடம் ஏது? சேலமா! கோவையா! தஞ்சையா மதுரையா! திருச்சியா! அங்கெல்லாம் போய என்ன செயவது? பார்லிமெண்ட் மெம்பா பதவி இல்லை இத்தடவை என்பது கண்ணுக்குத் தெரியும்போது 'சரி. அடுத்த லாபவழி என்ன? என்றுதானே நினைக்கவேண்டும். அந்த 'இலாபம்' வேறிடங்களை விடச் சென்னை சென்ருல் அதிகம் வரும்! சான்சு அடித்து காமராச தயவில் யாராவது ஒரு நோஞ்சானைப் போட்டால் காங்கிரசையே செல்வு செய்யச் செய்து, நம்மைத் திட்டிப் பார்க்கலாம்; அவர்கள் நெருப்பில் தானும் தன் சகாக்களும் குளிர் காயலாம். அதனுல்தான் காமராசனுக்குத் தன்னுடைய வீரதீரப் பராக்கிரமத்தைத் தூது அனுப்புவது போல, 'சிங்கத்தை அதன் குகையிலேயே எதிர்க்கிறேன்!'' என்று ஓலமிட்டிருக்கிருர். இந்தப் 'பெருமை'யை இவரே சொல்ல வேண்டியக் காரணம் என்ன? 'சிங்கத்தை எதிர்க்கப் போகிறேன்! என்ன ஆவேனே?' என்பது ஒருவிதம். 'சிங்கத்தை எதிர்க்கப் போகிறேன். போடு தயார் தீனி!' என்பது இன்னொரு விதம். இப்படிப் பயம் பரிதாபம், முதலியவைகளைக் கிளறக் காரணம் என்ன! சுயநலம்தான்!! சுயநலமின்றி தோழர் சம்பத் 'அதிர்வேட்டுகளில்' எனக்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் தெரிவதேயில்லை. கழக நிதியை எடுத்துக்கொண்டுபோன ஒரு விஷயம் போதாதா சென்னை மக்களுக்கு. அதற்குள்ளேயே பல இடங்களில் ''பார்லிமெண்டுப் பதவியா? சம்பத்! வயிறு கட்டித் தந்தோமே நிதியாக! எங்கே அந்தப் பணம்?'' என்கிற எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. கழகத் தொடர்பு இல்லாமலேயே இப்படியெல்லாம் கேள்வி கேட்கக்கூடிய சென்னை மக்கள் சரியான பதிலைச் சம்பத்துக்குத் தருவார்கள். மனோகரன் வெல்வார். சந்தேகம் வேண்டியதேயில்லை.

*   *   *

கே: சென்னையில் தி. மு. க. தலைவர்களான நாவலர், பேராசிரியர், மதி, சிற்றரசு முதலியோருக்கு எதிராகவும் தங்களுடைய கட்சி அபேட்சகர்களைத் தோழர் சம்பத்தின் கட்சி நிறுத்தப் போகிறதாமே?

கே. பி. மணவாளன்,
காஞ்சிபுரம்.

ப: அப்படித்தான் கேள்வி! தேர்தல் நடக்கும்போது அவருடைய நண்பர்கள் என்று இருப்பவர்களுக்கும் வேலை வேண்டுமல்லவா? அதோடு, காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கும், ஏனைய வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை. சம்பத்துடைய சகாக்கள், நம்மைத் திட்டிப் பேசுவது இலைமறை காயாகக் காங்கிரசுக்குப் பிரச்சாரம் செய்வதே ஆகும். தந்தை ஒரு வழியில் தன்னவர்களுக்கு இரண்டுமாதகர்ல 'உத்தியோகங்களை' வாங்கித் தருகிருர்! தனயரும தன் சகாக்களுக்கு 'மேடையும் உல்லாசமும்' இதன் மூலம் பெற்றுத்தர ஏற்பாடு செய்கிருர்! இதைத் தவிர, அவர்கள் போட்டியிடுவதில் என்ன இலாபமும் பயனும் நாட்டுக்கு இருக்கிறது?

எழுச்சி முரசம்!
எண்ணக் கருவூலம்!
வண்ணக் குவியல்!
பொன்னிகர்க் கதைகள்!
புதுப்புது அம்சங்கள்!
பூரிக்கும் வகையில்!

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

அளிக்கும்

முதல் பொங்கல் விருந்து

கழகத் தலைவர்களின்
கட்டுரைகள்... கதைகளோடு...

அரங்கண்ணல்

தீட்டும்

1. குறுநாவல்
2. தங்கத்தால் பைத்தியமானவர்
3. உலகெலாம் நிறைந்தவன்
4. அநாதைப் பிணமான அரசன்
5. மனைவியால் மாவீரனானவன்
6. பிணத்தைத் திருடிய பெருங்கள்ளர்கள்

முதலிய அற்புதமான அம்சங்களோடு,
மிகச் சிறந்த முறையில்
தயாராகிறது, சகோதரர்காள்.

விலை ரூ. 1-25 தான்

- முன்பணத்தோடு எழுதியுள்ள விற்பனையாளர்கட்கு மட்டுமே, மலர், அனுப்பப்படும்.
- குறிப்பிட்ட மலர்களே அச்சேறுவதால், பிறகு அதிக இதழ்கள் கேட்டுப் பிரயோசனமில்லை.

* பதிவுத் தபாலில் விரும்பும் சந்தாதாரர்கள் ரூ. 1—50 அனுப்புக.

* சாதாரணத் தபாலில் விரும்பும் சந்தாதாரர்கள் ரூ. 1—25 அனுப்பினுல் போதும்.

உங்களுடைய அன்பே, எமக்கு முதலீடு!
உங்களுடைய பாராட்டே, எமக்கு வருமானம்!

மலர் சம்பந்தமாகக் கடிதம் எழுதுகிறவர்கள், ''நிர்வாகி மலர்ப்பிரிவு'- என்று குறிப்பிட்டு எழுதுக.

அறப்போர் : : சென்னை-24

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு ,டிரஸ்டபுரம், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6